உ

தமிழ்ப் பொழில்

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	பிரசோற்பத்தி, ஆவணி.	மலர்
எ		ரு

பின்னங்குடிச் சுப்பிரமணியசாத்திரியார் தொல்காப்பியச் சொல்லதிகார வாராய்ச்சிக்

குறிப்புரையும் மறுப்பும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி

(முற்றொடர்ச்சி துணர் 7. பக்கம் 192.)

'அந்தக் கரணம் அவற்றின்ஒன் றன்றுஅவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணராது
அமைச்சரா சேப்பபநின்று அஞ்சவைத் தைத்தே.'

(சிவஞான போதம் சூ-4) இதன் பிண்டப்பொழிப்பு :—

'ஆன்மா அந்தக் காரணங்களில் ஒன்றுமன்று. ஆயினும் அமைச்சரோடு கூடி நின்று தன்றொழில் நடாத்தும் அரசன் போல, சகசமலத்தினால் உணர்வின்றி, அவ்வந்தக் கரணங்களோடு கூடிநின்று சாக்கிரம் முதலிய ஐந்தவத்தை யுடைத்தாம். எ-று. அகலவுரை 'வடமொழிச் சூத்திரத்து ஓதுதலின் ஈண்டும் 'ஆயினும்' என வருவித்து ஒருதொடராக வைத்துரைக்க. 'அந்தக் கரணம் அவற்றின் ஒன்றன்று ஆயினும்'

எனவே அவற்றின் ஒன்று அன்றுதலும் அனுவாத முகத்தால் ஈண்டேபெற்றும். இஃது உணராதார் 'அந்தக் கரணம் அவற்றின் ஒன்றன்று' என்றதனை வேறு தொடராக வைத்துரைப்ப. அங்ஙனம் உரைப்பின், முன்வருவனவற்றை அவாய்நின்று ஒரு பொருண்மேல்வாராமையின் ஒருசூத்திரமாதற்கு ஏலாமையறிக.'

'இவ்வாறன்றி, ஆன்மா அவற்றினொன்று அன்றுயினும் சகசமலத்து உணராமையால் அவற்றொடு சந்தித்தது; சந்தித்த வழி அவையும் தானும் அமைச்சர் சேய்ப்ப நிற்றலான் ஐந்தவத்தைத்து ஆயிற்று என, அதிகரணம் (இரண்டு) பகுத்துக்கொண்டதற்கு ஏற்ப, வேறுவேறு வினை முடிபு செய்துரைத்தலும் ஒன்று.'

'இதனுள் அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று' என்றது ஓர் அதிகரணம். 'ஆயினும்........அவை சந்தித்தது' என்றது ஓர் அதிகரணம். 'அமைச்சர சேய்ப்ப நின்று ஐந்தவத்தைத்தே' என்றது ஓர் அதிகரணம். ஆக மூன்று அதிகரணத்தது இச்சூத்திரம்' என்பது சிவஞானமுனிவர் உரை.

ஈண்டுக் கூறியவாற்றால், பல எழுவாயும் பல பயனிலையும் தம்முள் இயைந்து பல தொடர்ப்பட ஒரு சூத்திரம் அமையுமாறும் உடைத்து, அத்தொடர்ப்பொருள் ஒன்றை ஒன்று அவாவி ஒரு பொருண்மேல் வருமிடத்து என்பது முடிந்தவாறு அறிக.

'யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது; அசத்து இலதறியாது;
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா.' (சிவஞா-சூ-7)

இதன் பிண்டப்பொழிப்பு :—அசத்தெல்லாம் சத்தாகிய சிவத்தின் முன்னே பாழேயாம் ஆகலின், சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை அறிந்து அனுபவியாது. அசத்தாகிய பாசம் சடமாகலின் சத்தாகிய சிவத்தை அறிந்து அனுபவியாது; ஆதலால் (பாரிசேட வளவையானே) அவ்விரண்டையும் அறிந்து அனுபவிப்பது சத்தேயுமன்றி அசத்தேயுமன்றி சதசத்தாயுள்ள ஆன்மா.' எ-று.

இனி, வடமொழிச் சிவஞானபோதம் சூ-6. மொழிபெயர்ப்பு:- 'சிவமாகிய சித்தின் சந்நிதியில் பிரபஞ்சமாகிய அசித்து அறியமாட்டாது. ஆதலின் சிவமும் பிரபஞ்சமும் என்னும் இரண்டும் ஒன்றையொன்று அறியமாட்டா. எவன் பிரபஞ்சத்தையும் சிவனையும் அறிகிருனே அவன் அவ்விரண்டற்கும் வேருகிய ஆன்மாவாம்' எ-று. எனவே வடநூலுள்ளும் ஒருபொருள் நுதலிய ஒருசூத்திரம், பல எழுவாயும் பல பயனிலையும் தம்முளியைந்து பலதொடர்ப்பட வந்துளது காண்க. இவ்விடத்தும் வாக்கிய சேடம் வருமோ? பரமசிவன் திருவாக்குக்கு வேருக வாக்கியசேடம் என்பதும் ஒன்றுண்டோ?

இவ்வேழாஞ் சூத்திரத்தில், நுதலியபொருள் யாதோவெனின், (ஆருஞ் சூத்திரம் சத்தும் அசத்தும் வரைசெய்து உணர்த்துதல் நுதலிற்முக) ஒழிந்த சதசத்தின்இயல்பு வரை செய்துணர்த்து முகத்தானே ஆன்மாவுக்குச் சிறப்பியல்பு கூறுதல் நுதலிற்று' எ-து. (திராவிட மாபாடியம்) ஈண்டேச் சதசத்தாகிய ஆன்மாவுக்கு இயல்புகூற எழுந்த சூத்திரத்திலே இயைபு பட்டமையால் சத்தின் இயல்பும் அசத்தின் இயல்பும் ஒருவாறு ஓதப் பட்டது காண்க. இக்கருத்தை உணர்ந்துகொள்ள வல்லார்க்கு 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரத்தின் கருத்தை உணர்ந்து கொள்ளுதல் இடர்ப்படாது. ஆகலின், அச்சூத்திரத்தில் தலைமைப் பொருளுக்கேயன்றி அதனேடு இயைபுடைய தலைமையில் பொருளுக்கும் இயல்பு எடுத்துரைக்கப்பட்டதனுல் வாக்கியபேதம் என்னும் குற்றம் வருமென்பதற்கு இடமின்மை அறிக.

தொல்காப்பியத்திலே இங்ஙனம் பல தொடர்ப்பட வந்த சூத்திரங்கள் இன்னும் எத்தனையோ உள.

'பெயரி னாகிய தொகையுமார் உளவே;
அவ்வு முரிய அப்பா லான.'

'அவற்றுள், நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்
நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே

முறைப் பெயர்க் கிளவி இரண்டாகும்மே
ஏனைப் பெயரே தத்தம் மரபின.'

'வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே;
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே.' (சொல்லதிகாரம்)

'அவைதாம், குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தமென்ற
முப்பாற் புள்ளியும், எழுத்தோ ரன்ன.'

'வேற்றுமை யல்வழி இஐ யென்னும்
ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய;
அவைதாம், இயல்பாகுநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர்.'

'ஆற னுருபினும் நான்க னுருபினும்
கூறிய குற்றொற் றிரட்ட லில்லை;
ஈறுகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் னன.'

'அள்விற்கும் நிறையிற்கும் மொழி முதலாகி
உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே;
அவைதாம், கசதப வென்று நமவ வென்று
அகர வுகரமோ டவையென மொழிப.'

'எல்லாரு என்னும் படர்க்கை இறுதியும்
எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்
ஒற்றும் உகரமும் கெடுமென மொழிப;
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி;
உம்மை நிலையும் இறுதி யான;
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன;
நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே.' எழுத்ததிகாரம்

'காரும் மாலையும் முல்லை குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.'

'வைகுறு விடியல் மருதம் ஏற்பாடு
நெய்த லாதல் மெய்பெறத் தோன்றும்.' (தொல்காப்பியம் [அகத்திணையியல்)

'கிழவி சொல்லின் அவளறி கிளவி
தோழிக் காயின் இடம்வரை வின்றே.'

'கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்
ஏனோர்க் காயின் இடம்வரை வின்றே.' (ஷை-உவமவியல்)

'ஓரறி வதுவே உற்றறி வதுவே,
இரண்டறி வதுவே அதனொடு நாவே,
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே,
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே,
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே,
ஆறறி வதுவே அவற்றொடு மனனே,
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.' ஷை மரபியல்

'மக்க டாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.' ஷை

ஒரு சூத்திரத்தில் ஓர் உத்தேசியமும் ஒரு விதேயமுமே இருத்தல்வேண்டும், பல இருப்பின் வாக்கியபேதம் என்னும் குற்றம் வருமென்று சொல்லி, 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரத்தைப் புரட்டித் தமக்குத் தோன்றிய வாறே பொழிப்புரைத்த குறிப்புரையாளர், மேற்கண்ட சூத்திரங்களையெல்லாம் எப்படிப் புரட்டியுரைப்பாரோ; அதனையும் பார்த்தல்வேண்டும்.

இனித், தமிழிலக்கண முதற்குரவரும், தொல்காப்பியனார்க்கு ஆசிரியரும் ஆகிய அகத்தியனாரும்,

'ஏழியன் முறையது எதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்று
ஓதிய புலவனும் உளன்; ஒரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்.'

'எனைத்து முற்றடுக்கினும் அனைத்தும்ஒரு பெயர்மேல்
நினைத்துக் கொளநிகழும் நிகழ்த்திய முற்றே,
வினையெஞ்சு கிளவியும் பெயரெஞ்சு கிளவியும்
பலபல அடுக்கினும் முற்றுமொழிப் படிய.' என்று
பலதொடர்ப்படச் சூத்திரம் இயற்றினர்.

இனி, நன்னூலுள்ளும் அவ்வாறே பல சூத்திரங்கள் வந்தன.

'மொழிமுதற் காரண மாம்அணுத் திரளொலி
எழுத்து அது முதல் சார்பென இருவகைத்தே.'

'எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருடரிற்
பதமாம்; அது பகாப் பதம்பகு பதமென
இருபா லாகி இயலும் என்ப;
மக்கள் தேவர் நரகர் உயர்திணை;
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை.'

'ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி
....
குறிப்பிற் றருமொழி; அல்லன வெளிப்படை.'

'எல்லை யின்னும் அதுவும் பெயர் கொளும்;
அல்ல வினைகொளும்; நான்கே ழிருமையும்
புல்லும் பெரும்பாலும் என்மனர் புலவர்.' (இவை
நன்னூற் சூத்திரங்கள்.)

வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.' என்னும்
சூத்திரத்துக்குச் சேனவரையர், கூறப்பட்ட பதினோரீற்றவாய் வினைபற்றிவரும் பாலறிசொல்லும் 'அவன் இவன் உவன் என்பன முதலாகப் பெயர் பற்றிவரும் பாலறிசொல்லும், தம்முள் தொடருங்கால், ஒருபாற்சொல் ஏனைப்பாற்சொல்லோடு மயங்கா, தம்பாற் சொல்லோடு தொடரும்; என்று பொருள்கூறி முடித்து விட்டு, அதன் பின் 'தம்மரபினவே யென்பதனைப் பிரித்து

வேறோர் தொடராக்கிச் சொற்கண் மரபு பிறழா தம்மரபினவே யென மரபு வழுக் காத்ததாக உரைக்க. இது யோக விபாகம் என்னும் நூற்புணர்ப்பு. முன் இருபொருள்பட உரைப்பனவெல் லாம் இந்நூற் புணர்ப்பாகக் கொள்க' என்று உரைத்தனர். இதனால் இருதொடர்ப்படச் சூத்திரித்தல் வழுவன்றென்பதே சேனாவரையர்க்குக் கருத்தாதல் துணியப்படும்.

இத்துணையும் கூறியவாற்றால், ஒரு சூத்திரத்தில் ஓர் உத்தேசியமும் ஒரு விதேயமுமே இருத்தல்வேண்டுமென்றும், பல உத்தேசியமும் பல விதேயமும் இருப்பின் வாக்கிய பேதம் என்றும் குற்றம் வருமென்றும் குறிப்புரையாளர் கூறியது தவறென்பது உணர்த்தப்பட்டது. இதனாலே, சேனாவரையர் உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே என்னும் சூத்திரத்தில் 'இவ்வாறு ஒருபொருள் நுதலியதாக உரையாக் கால் சூத்திரம் ஒன்றுமாறில்லை' எனவும், 'பெயரினாகிய தொகையுமாருளவே, அவ்வுமுரிய அப்பாலான' என்னும் சூத் திரத்தில் 'இவ்வாறு இருதொடர்ப்படச் சூத்திரித்து இடர்ப் படுவதென்னை' எனவும் கூறியதன் கருத்தைக் குறிப்புரை யாளர் பிழைத்துணர்ந்தாரெனவும் அறிக. 'இவ்வாறு இரு தொடர்ப்படச் சூத்திரித்து இடர்ப்படுவதென்னை', என்றது பரபக்கத்தின் தடைச்சொல். பரபக்கம் ஈண்டு 'பெயரினாகிய தொகையும் எழுவாய் வேற்றுமையாம்' என்பது, அதைச் சேனாவரையர் மறுத்து இருதொடர்ப்படச் சூத்திரம் செய்தல் அவாய் நிலையுள்வழி அமையுமென்னும் கருத்தினரே யாவர். இச்சூத்திரத்தில் நுதலிய ஒருபொருளாவது 'அவ்வுமுரிய அப்பாலான' என்பதே. அப்பொருளை அவாய் நின்ற பொரு ளாவது 'பெயரொடு பெயரும் பெயரொடு வினையும் தொக்கன தொகைச் சொல்லாம்' என்பது சேனாவரையர் உரையானே அறிந்து கொள்க. இதனாலே, ஆசிரியர் சிவஞான முனிவர்க்கும் சேனாவரையர்க்கும் கருத்து வேற்றுமை யில்லையென்பதும் உணர்ந்துகொள்க.

மறுப்பு 21.

(சூ-1-குறிப்புரை—மறுப்பு 20-ல் இரண்டாவது பிழை யென்று குறிக்கப்பட்டது, அஃதாவது 'உத்தேசியம் முன்னரே

அறியப்படினல்லது அதனைப்பற்றி மற்றொன்று விதித்தல் இயலாது. 'ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே' என் புழிச் சொல் என்பது 'ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி' என்னும் எழுத்ததிகாரச் சூத்திரத்தால் முன்னமே பெறப்பட்டது. அதனை உத்தேசித்து இங்கு உயர்திணை அஃறிணையின்கண் இசைத்தல் விதிக்கப்பட்டது,' என்பது.

இங்ஙனம் குறிப்புரையாளர் கூறியதே இலக்கணமாயின் 'எழுத்தெனப்படுப, அகரமுதல் னகரவிறுவாய முப்பஃதென்ப சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே' என்னும் எழுத்ததிகார முதற் சூத்திரத்தில், உத்தேசியம் என்பது எழுத்து என்பதுதானே, அது அம்முதற் சூத்திரத்துக்கு முந்திய ஒன்றால் பெறப்பட்டிருத்தல் வேண்டுமே, அது எச்சூத்திரம்? அச்சூத்திரத்துக்கு முந்துற்ற சூத்திரம் ஒன்றும் இல்லையே. அதற்கு என்செய்வது. அதனாலே இவர் கூறிய இலக்கணம் பிழையாதல் துணிக.

இனி, அம்முதற் சூத்திரத்தில் உள்ள 'எழுத்து' என்பது பனம்பாரனார் கூறிய வடவேங்கடம் தென்குமரி என்னும் சிறப்புப்பாயிரத்துள், 'எழுத்தும் சொல்லும் பொரு ளுநாடி' என்புழி ஆண்ட 'எழுத்து' என்பதை உத்தே சித்து வந்ததென்று குறிப்புரையாளர் கூறினும் கூறுவர். அற்றேல் அச்சிறப்புப் பாயிரத்தில் ஆண்ட 'எழுத்து' என்பது எதனை உத்தேசித்து நின்றது' எனின், நூலின் பகுதியாகிய எழுத்ததிகாரத்தை உத்தேசித்ததெனல்வேண்டும். அதுவும் அம் முதற் சூத்திரத்துள்ள 'எழுத்து' என்பதையே உத்தேசித்த தெனல்வேண்டும். ஆகவே இது ஒன்றனையொன்று பற்றுதல் என்னும் குற்றத்தின்பாலும் தன்னைப் பற்றுதல் என்னும் குற்றத்தின்பாலும் படும்என்க. வடநூலார் தன்னைப் பற்றுதல் என்னும் குற்றத்தை ஆன்மாச்சிரயம் என்றும், ஒன்றனையொன்று பற்றுதல் என்னும் குற்றத்தை இதரேதராச்சிரயம் என்றும் கூறுவர்.

தொல்காப்பிய வுரையாசிரியர் பலரும், சிறப்புப் பாயிரத்திலே 'எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' என்று நிறுத்த முறையானே,* ஆசிரியர் தொல்காப்பியனார் எழுத்தின் இலக்கணத்தை உணர்த்துவான் எடுத்துக்கொண்டார் என்று 'எழுத்தெனப்படுப' என்னும் முதற் சூத்திரவுரையுட் கூறினர். தொல்காப்பியம் என்னும் நூல்தோன்றிய பின்னர்த்தோன்றியதே பனம்பாரனாரால் செய்யப்பட்ட சிறப்புப்பாயிரம் ஆதலால் சிறப்புப் பாயிரத்துள் பரம்பாரனார் நிறுத்த முறையானே தொல்காப்பியனார் நூலுள் எழுத்திலக்கணத்தை ஓதினர் என்பது பொருந்தாதென்பது ஆசிரியர் சிவஞான முனிவர் உரையினால் அறியப்படும். ஆகவே, அம்முதற் சூத்திரத்துள்ள 'எழுத்து' என்பது, சிறப்புப் பாயிரத்துள் வந்த 'எழுத்து' என்பதை உத்தேசித்து நின்றதென்றலும் பொருந்தாது. இனி, அவ்வாறே சொல்லதிகாரத்து முதற் சூத்திரத்தில் உள்ள சொல் என்பது, எழுத்ததிகாரத்துள்ள ஓரெழுத்தொருமொழி என்னும் சூத்திரத்தில் வந்தமொழி என்றதனை உத்தேசித்து நின்றதென்ற குறிப்புரையாளர், அம் 'மொழி' என்பது தானும் அச்சூத்திரத்தின் முந்நியது எதனை உத்தேசித்து நின்றதென்னும் கடா எழின், சிறப்புப்பாயிரத்துள்ள 'சொல்' என்றதனை உத்தேசித்து நின்றதெனவும், அது மேல் நூலிலுள்ளதோர் சூத்திரத்துள்ள 'சொல்' என்றதனை உத்தேசித்து நின்றதெனவும் விடை இறுத்தல்வேண்டும். வேண்டவே, அவ்வுரையும் முற்கூறிய குற்றத்தின்பாற் படுமாறு அறிக.

மறுப்பு 22.

(சூ-1-குறிப்புரை) (இது, மேற்கூறிய மறுப்பு 20-ல் 1-வது பிழையென்று குறிக்கப்பட்டது) அஃதாவது, உயர்திணையென்மனார் மக்கட்சுட்டே, என்னும் சூத்திரத்தில் 'சொல்' என்பதே 'உத்தேசியம்,' 'மக்களைக் குறிக்கும் உயர்திணைக்கண்ணும் மக்களல்லாத பிறவற்றைக் குறிக்கும் அஃறிணைக்கண்ணும் இசைக்கும் என்பது 'விதேயம்' என்றது.

ஈண்டுக், குறிப்புரையாளர் உத்தேசியம் இது விதேயம் இது என்று எடுத்துக் காட்டியது பிழையாதலன்றியும், விதேய வாசகமாக அவர் குறித்தனவெல்லாம் அத்திப்பழம் ஆயின. அத்திப் பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தையென்ப.

ஆசிரியர் தொல்காப்பியனார், 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை யென்மனார் அவரலபிறவே, ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே' என்று மூன்று பயனிலைத்தொட ருறச் சூத்திரம் இயற்றினார்க்கு, குறிப்புரையாளர் குறிக்கும் வாக்கியபேத விலக்கணம் தெரியாதா? குறிப்புரையாளர் கூறுவதே பொருளாயின் 'மக்களைக் குறிக்கும் உயர்திணைக் கண்ணும், பிறவற்றைக் குறிக்கும் அஃறிணைக் கண்ணும், இசைக்கும் சொற்றும் என்மனார் புலவர்' என்று சூத்திரம் செய்தல் ஆசிரியர்க்கு இயலாதா. ஆசிரியர் தான் தவறினார் எனினும், இளம்பூரணர், தெய்வச்சிலையார், பேராசிரியர், சேனு வரையர், கல்லாடர், நச்சினார்க்கினியர் என்னும் உரையாசிரியர் எல்லோரும் ஒருபடியாக மக்களென்று கருதப்படும் பொருளை உயர்திணை யென்ப. பிறபொருளை அஃறிணையென்ப, அவ் விரண்டு திணைக்கண்ணும் சொல் இசைக்கும்' என்று மூன்று எழுவாயும் மூன்று பயனிலையும் தனித்தனி இயைந்த தொட ராகப் பொருளுரைத்தாரே யன்றிக் குறிப்புரையாளர் போலச் 'சொல், மக்களைச் சுட்டும் உயர்திணைக் கண்ணும் பிறவற்றைக் குறிக்கும் அஃறிணைக் கண்ணும் இசைக்கும்' என்று திரித்து முறுக்கினாரிலர். 'ஒன்பது கோண்ட மூன்றுபுரி நுண்ஞாணை' அரைஞாணகத் திரித்து முறுக்கிவிட்டார் குறிப்புரையாளர். அந்த அரைஞாண் எற்றுக்கு உதவும், அது கிடக்க.

குறிப்புரையாளர் குறித்த விதேய வாசகத்தில் 'மக்களைக் குறிக்கும் உயர்திணைக் கண்ணும்' 'பிறவற்றைக் குறிக்கும் அஃறிணைக் கண்ணும்' என்றார். ஈண்டுக் குறித்தலாவது என்னை? 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்புழிக் கண்ட குறித்தலா? மக்கள், பிற என்பன முறையே குறிக்கப்படுபொருளாகவும், உயர்திணை அஃறிணை என்பன

குறிப்பவாகவும் கூறினர். உயர்திணை, அஃறிணை என்பன மக்கள பிற என்னும் பொருளைக் குறித்தனவா, அன்றி அச்சொல்லைக் குறித்தனவா? மக்கள் என்னும் பொருளைக் குறிப்பது மக்கள் என்னும் சொல்லன்றோ, பிற என்னும் பொருளைக் குறிப்பதும் பிறவென்னும் சொல்லன்றோ, உயர் திணை என்பது மக்கள் என்னும் பொருளைக் குறிக்குமாறு எங்ஙனம்? அஃறிணையென்பது பிறபொருளைக் குறிக்குமாறு எங்ஙனம்? 'சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும் சொல்லின் ஆகும்' என்றார் ஆசிரியர். உயர்திணை என்பது சொல், அதன்பொருள் உயர்ந்த சாதி என்பது. சொன்னிலையால் அது பெயராம். மக்கள் என்பது உயர்திணையென்னும் சொற் குறித்த பொருளன்று. அவ்வாறே பிறபொருளும் அஃறிணை யென்னும் சொற்குறித்த பொருளன்று. ஆகவே மக்கள் பிறவென்னும் சொற்பொருளோடு உயர்திணை அஃறிணை யென்னும் சொற்பொருளிடை வேற்றுமை இன்னதென்று குறிப்புரையாளர் சிறிதும் தெரிந்தாரிலர். அன்றியும் அவர் சொல், பொருள், பெயர் என்னும் இவற்றுள், ஒன்றனோடு மற்றொன்றற்குள்ள இயைபும் (சம்பந்தமும்) வேற்றுமையும் இன்னின்னதென்று உணர்ந்து கொண்டாருமிலர்.

'மக்களைக் **குறிக்கும் உயர்திணை**' எனப் பெயரெச்சத் தொடராக முடித்துக்காட்டிய குறிப்புரையாளர் கருத்தில், அது,

'வாழும்இல்' என்புழிப்போல நிலப்பொருட் டென்பதோ?
'கற்குநூல்' என்புழிப்போல செயப்படுபொருட் டென்பதோ?
'துயிலுங்காலம்' என்புழிப்போலக் காலப்பொருட்டென்பதோ?
'வனையுங்கோல்' என்புழிப்போலக் கருவிப்பொருட்டென்பதோ?
'ஓதும்பார்ப்பான்' என்புழிப்போல வினைமுதற் பொருட் [டென்பதோ?
'நடக்கும்நடை' என்புழிப்போல வினைப்பொருட்டென்பதோ?
'நோய்தீரும் மருந்து' என்புழிப்போல ஏதுப்பொருட்டென்ப தோ?

அன்றி, 'அரசன் ஆகொடுக்கும் பார்ப்பான்' 'ஆடை ஒலிக்கும் [கூலி'

'பழமுதிருங்கோடு' 'நின்முகம் காணும் மருந்தினேன்' 'பந்தெறிந்த வியர்,' என்னும் இவற்றுள் ஒன்றன் பொருட்டென்பதோ?

மேற்கண்ட பொருள்வகையுள் ஒன்றனையும் ஏலாமையால் அத்தொடர்மொழி பொருளிலமொழிதல் என்னும் குற்றத்தின் பாற்படுமாறு அறிக.

இதனாலே, குறிப்புரையாளர் பெயரேச்ச விலக்கணம் உணராமையும் விளக்கினர். குறிப்புரையாளர் புதிய உரைநடையானது, 'அன்ன நடை நடக்கப் போய்த் தன்னடையும் இழந்தாள்' என்ற கதையாக முடிந்தது.

பண்டை உரையாசிரியரெல்லோரும் அதிகாரம் நுதலிய பொருள் இது, ஒத்து நுதலிய பொருள் இது, சூத்திரம் நுதலிய பொருள் இது என்று முன்னர்க் கூறிவிட்டுப், பின்னர் சூத்திரப் பொருளுரைப்பர். குறிப்புரையாளரோ, உத்தேசியம் விதேயம் என்பனபற்றி விரித்துரைத்துக்கொண்டு சென்றவர், 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரம் நுதலியபொருள் இதுவென்று, தமிழிலக்கணமுறையால் குறிப்பெழுதாது விட்டனர். இது ஆரியமும் தமிழும் உடனுரைத்தலால் வந்த குற்றம். இது மயக்கங்கூறல் என்னும் குற்றத்தின் பாற்படுமென்று 'சிதைவெனப்படுபவை வசையறநாடின்' என்னும் சூத்திரவுரையுள் பேராசிரியர் குறித்தவாறு அறிக.

இனிக், குறிப்புரையாளர் கூறுகின்றபடி 'உயர்திணை என்மனார்........சொல்லே' என்னும் சூத்திரத்தில் 'சொல்' என்பதையே உத்தேசியமாகக் கொள்வோம் (எதனைப்பற்றி வேறொன்று விதிக்கப்படுவதோ அது உத்தேசியம்) எனின்,

'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.'

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர்.'

'சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே.'

'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப.'

'ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.' என்னும்

இச்சூத்திரங்களிலேயும் உத்தேசியமாகக் கொள்ளப்படுவது எவ்வாற்றானும் 'சொல்' என்பதன்றி வேறென்னை? ஆகவே எத்தனை சூத்திரங்களில் 'சொல்' என்பது உத்தேசியமாக வருதல் கூடும். நன்னூலார் 'சொல்' என்பதற்கு இலக்கணம் கூறுவார், மேற்குறித்த சூத்திரக் கருத்து அனைத்தும் அடக்கி,

'ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா
இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும்
மூவகை யிடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.' என்று

ஒரு சூத்திரமாக ஓதினர். ஆகவே 'உயர்திணை என்மனார்.... சொல்லே' என்னும் சூத்திரம் நுதலியபொருள் 'சொல், இருதிணைக் கண்ணும் இசைக்கும் என்பதே யன்று. இருதிணை யிலக்கணம் முன்னர் உணரப் படினன்றி இருதிணையின் இசைக்கும் சொல்லியல்பு யாங்ஙனம் அறிதல் கூடும். இரு திணையிலக்கணமும் சொல்லோடு இயைபுபட்டமை அறியப் படும் ஆதலின்,

'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;
அஃறிணை என்மனார் அவரல பிறவே;
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே. என்று

குறிப்புரையாளர் கருத்தின்படி மூன்று உத்தேசியமும்மூன்று விதேயமும் இணைந்து ஒருபொருள் நுதலிவருமாறு சூத்திரம் செய்தார் ஆசிரியர். நூலின்கண் ஆளுதல்வேண்டி உலகத்துப் பொருள்கள் எல்லாவற்றையும், அறிவு விசேடம்பற்றி இரு

வகையாகப் பகுத்துக்கொண்டு, அறிவின் மேம்பட்ட மக்களை உயர்திணையென்றும், அறிவின் மேம்பாடில்லாத பிறவற்றை அஃறிணையென்றும் முதனூலாசிரியராகிய அகத்தியனார் குறியிட்டார்.

உயர்திணை அஃறிணையென்னும் பாகுபாடு கூறுதல் தமிழ் இலக்கணம் என்னும் தேருக்கு அச்சாக அமைந்துளது. இதுவே வடமொழி யிலக்கணக் கடலுக்கும் தமிழிலக்கணக் கடலுக்கும் இடையேயுள்ள எல்லைக் கல்லாக வுள்ளது.

'உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப.' (எழுத்-தொகை)

'அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே' (ஷை)

'உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க் கவ்விய னிலையலும்.' (ஷை)

'உயர்திணை யாயின் நம்மிடை வருமே.' (உருபியல்)

'உயர்திணை யாயின் உருபியல் நிலையும்.' (புள்ளிமயங்கியல்)

'உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்.' (குற்றி-ல்)

என்னும் சூத்திரங்களால், எழுத்ததிகாரத்துக்கு உயர்திணை அஃறிணைப் பாகுபாடு கூறுதல் இன்றியமையாததாயிற்று.

சொல்லதிகாரத்துக் கிளவி யாக்கத்துக்கும், பெயரியல் வினையியல், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, எச்சவியல் இலக்கணங்களுக்கும் அது இன்றியமையாததாயிற்று. பொருளதிகாரத்துப் பலவியல்களுக்கும் அது இன்றியமையாததாயிற்று, ஆகவே இத்துணை யின்றியமையாமைச் சிறப்புடைய உயர்திணை அஃறிணைப் பாகு பாட்டிலக்கணம் இது வென்று கூறுவிடின், தமிழிலக்கண நூல் குன்றக்கூறல் என்னும் குற்றப்படாதோ? அவ்விலக்கணத்தைக் குன்றுமைக் கூறுதலை மேற்கொண்டதே,

'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே,
அஃறிணை யென்மனார் அவரல பிறவே,
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.' என்னும்

சொல்லதிகாரத்து முதற்சூத்திரமெனத் தெற்றென உணரப்படும்.

'உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்
றாயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே,' என

ஒரு சூத்திரம் எழுத்ததிகாரத்தே உள்ளது. அச்சூத்திரம் உயர்திணை அஃறிணை யென்னும் குறியீடு கூறுதல் மாத்திரையே நுதலிற்றென்றும், உயர்திணை அஃறிணைப் பெயர் இலக்கணம் பெயரியலுள் ஓதப்பட்டதென்றும், அச்சூத்திர வுரையுட் கூறிய நச்சினார்க்கினியர், 'உயர்திணை யென்மனார்....சொல்லே' என்னும் சூத்திரம் உயர்திணைப் பொருள் அஃறிணைப்பொருள் என்னும் பொருள் வரையறையும் உயர்திணைச்சொல் அஃறிணைச் சொல் என்னும் சொல்வரையறையும் கூறுதல் நுதலிற்றென்றார்; அது ஏற்புடைத்தே.

'ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்' என்னும்

மரபியற் சூத்திரவுரையிலே 'தொகுத்துக் கூறல்' என்பது சொல்லிரண்டு பொருளிரண்டு என ஆசிரியன்றானே தொகை கூறுதல் போல்வன, 'வகுத்து மெய்ந்நிறுத்தல்' என்பது உயர்திணை அஃறிணையென்ற தொகையினை ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென்றாற் போல வகுத்தல்' என்று பேராசிரியர் கூறிய வாற்றானும் நச்சினார்க்கினியர் உரை ஏற்புடைத்தாதல் அறிக.

இன்னும் அப்பேராசிரியர் 'வந்தது கொண்டு வாராதுணர்த்தல்' என்பது பற்றிய உரையிலே, 'ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே' என்றவழித்திணை யென்னும் பெயர் எப்பொருட்கும் எய்துவித்தல் ஒரு சூத்திரத்துள்ளே கோடலின் ....' எனவும், 'விட்டகல்வின்றி விரிவொடு பொருந்தி' என்பது பற்றிய உரையிலே, 'உயர்திணை அஃறிணை என்பன

துளக்கலாகாத் துணைமை எய்தி நின்றன' எனவும், 'தான் குறியிடுதல்' என்பது பற்றிய உரையிலே 'உயர்திணை அஃறிணை என்பன ஆசிரியர் குறியீடு' எனவும் கூறியதனால் மேற் கூறிய நச்சினார்க்கினியர் உரையும் துளக்கலாகாத் துணைமை எய்தியவாறு அறிக.

உயர்திணை என்பதற்கு உயர்ந்த சாதியெனவும் அஃறிணை யென்பதற்கு இழிந்த சாதியெனவும் பொருள். சாதி என்பது பண்பின் வகையுட்பட்டது, உயர்ந்த சாதியும் இழிந்த சாதியும் பொருளைப் பற்றிய பண்பேயன்றிச் சொல்லைப்பற்றிய பண்பல்ல. ஆகவே உயர்திணை அஃறிணையென்னும் குறியீடு பெறுதற்கு உரியன பொருளேயாம். இக்கருத்தானே ஆசிரியர் 'மக்களை உயர்திணையென்பர் ஆசிரியர், பிறவற்றை அஃறிணை யென்பர் அவரே.' என்று பொருளே பற்றி ஓதிப் பின்னர் அத்திணைக்கண் சொல்நிகழுமாறும் ஓதினர். ஆசிரியர்க்கு மக்கள் என்னும் சொல் உயர்திணையென்பது கருத்தன்று. மக்களைப் பொருளென்று சுட்டினும் அஃறிணையாம் என்பதே அவர் கருத்து. இதனைச் சேனாவரையர் உரையானும் உணர்க. பொரு ளினை உணர்ந்த பின்னர் சொன்னிலை யுணரப்படும் ஆதலின் ஆயிருதிணையின் இசைக்குமன சொல்லே' என்றார்.

இக்கருத்தே பற்றி நன்னூலாரும், தொல்காப்பியனார் 'தெய் வஞ்சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்' என்னும் சூத்திரத்தால் உயர்திணையாகக் குறித்த தேவரையும் நரகரையும் மக்களொடு கூட்டி,

'மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை' யென்று

பொருள் பற்றியே சூத்திரம் ஓதினர். நன்னூலுக்கு நல்லுரை விரித்த சங்கர நமச்சிவாயப் புலவரும் அச்சூத்திரம் நுதலிய பொருள் 'இருதிணையா மாறுணர்த்துதல்' என்று குறித்தார்.

இனிப், பவஞானமகற்றிய சிவஞான முனிவரும் 'மக்கட் பொருளெனவே அமையுமாயினும், அப்பொருளுக்கு உயர்திணை யெனக் குறியிட்டதற்குக் காரணம் தோன்ற, மனத்தோடு

ஆறறிவினரே மக்களென மரபியலுட் கூறும் உயர்ச்சிபற்றி மக்களாகிய நன்கு மதிக்கப்படும் பொருளென்பார் மக்கட் சுட்டு என்றார்' என்று முதற்சூத்திர விருத்தியுட் கூறியது காண்க.

'அன்றியும், அம்முனிவர், 'அற்றேல், னஃகான் ஒற்றே ஆடூஉவறிசொல்,' 'ளஃகான் ஒற்றே மகடூஉ வறிசொல்' என் றாற்போலப் பிறுண்டும் பொருளை முன்னர்க் கூறிப் பெயர் பிற்கூறுப வாகலானும், இதற்கிது பெயரென்று பொருளை முன்னர்க் காட்டிப் பெயர் பிற்கூறுதலே மரபு ஆகலானும், ஈண்டும் 'அகரமுதல் னகரவிறுவாய் முப்பஃதும் எழுத்தென்ப' என்றோதல் வேண்டும். அவ்வாறு ஓதாது 'எழுத்தெனப் படுப, அகரமுதல் னகரவிறுவாய்' என மாறிக் கூறியதென்னை யெனின், நன்று வினவினாய்; அவ்வாறு ஓதுதல் மரபாயினும் எழுத்து என்பது மங்கல மொழியாதலின், முதற்கண் மங் கலம் கூறுதல் மரபெனக் கருதி 'எழுத்தெனப் படுப அகர முதல் னகரவிறுவாய்' என்றார். என்றாரேனும் 'எழுத்துப் பிரிந்திசைத்தல் இவண் இயல்பின்றே.' 'எழுத்தோரன்ன. பொருள்தெரி புணர்ச்சி.' எனப் பிறுண்டும் எடுத்தாளுதலால் அவ்வாட்சிபற்றி எழுத்தென்பது பெயர் அகர முதல் னகர விறு வாய் என்பது பெயர்ப்பொருள் எனத் துணிந்த பின்னர் அகர முதல் னகர விறுவாய் முப்பஃது எழுத்தெனப் படுப, என் னும் கிடக்கை முறை உள்ளத்தின்கண் நிலைபெறும். அதன் பின்னர்ச் சூத்திரப்பொருள் இனிது விளங்கும். ஆண்டுப் பெயர் பின்னுதலிற் பிறழாமை உணர்க. இனி, முதனூல் ஆசிரியனால் படைத்திட்டுக் கொண்ட பெயர் (எழுத்து) என்னுது, உலகத்தில எழுதப்பட்டவையெல்லாம் எழுத்தா மன்றே அதனை ஈண்டு ஆளுதற்பொருட்டு முதனூல் ஆசிரி யனால் வரையறுத்துக் கொள்ளப்பட்டதென நியமவிதியாகக் கொள் ளினும் அமையும். 'வல்லெழுத்தென்ப கசடதபற,' 'மெல் லெழுத்தென்ப ஙஞணநமன.' 'இடையெழுத்தென்ப யரல வழள.' 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை

யென்மனார் அவரலபிறவே.' என்றற்றொடக்கத்தனவும் அவ்வாறே கண்டு கொள்க' என்றும் அம்முதற் சூத்திரவிருத்தியுள்ளே கூறினார்.

இவ்வுரையாலே, சொல், பொருள், பெயர் இவற்றின் வேறுபாடும் அறிந்து கொள்க.

சேனாவரையர், 'உயர்திணை யென்மனார்' என்னும் சூத்திரத்தால் உயர்திணைப் பொருளும் அஃறிணைப் பொருளும் ஆகிய பொருள்வரையறை சொல்லாமலே அமையுமென்னும் கருத்தால், அதனை விளங்கக்கூறாது, எடுத்துக் கொண்ட சொல்லிலக்கணம் பற்றிக் கூறுதற்கு வேண்டப்படும் உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் ஆகிய சொல்வரையறை கூறுதலை நுதலிற்று அச்சூத்திரமென உரைத்தார். நச்சினார்க்கினியர் அதனை விளக்கி, அவ்விருதிணைப் பொருள் வரையறையும் சொல்வரையறையும் கூறுதலை நுதலிற்றென்றார். இக்கருத்துணராத குறிப்புரையாளர் நச்சினார்க்கினியர் கூறிய அவ்வுரை வாக்கிய பேதம் என்னும் குற்றத்தின் பாற்படும் என்றார்.

ஒரு சூத்திரத்தில் இருதொடர்ப்படப் பொருளுரைத்தால், அது வாக்கிய பேதம் என்னும் குற்றத்தின்பாற்படும் என்பதே சேனாவரையர்க்கும் கருத்தாமென்று குறிப்புரையாளர் கூறினார். சேனாவரையர் கருத்து அதுவன்றென்பது 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரவுரை முடிவில் கூறிய பகுதியால் உணரப்படும். அது வருமாறு:—

'சொல்வரையறுத்தலே இச்சூத்திரத்திற்குக் கருத்தாயின் ஆடூஉ வறிசொல், மகடூஉ வறிசொல் என்றாற் போல உயர்திணைச்சொல் அஃறிணைச்சொல் எனவே அமையும், உயர்திணை மக்கள் அஃறிணை பிறவெனல் வேண்டாவெனின்;—உயர்திணை அஃறிணை யென்பன தொல்லாசிரியர் குறி யாகலான், ஆடூஉ மகடூஉப்போல வழக்கொடு படுத்துப் பொருளுணர்தல் ஆகாமையின், உயர்திணை மக்கள் அஃறிணை பிறவெனல் வேண்டும் என்பது. இவ்வாறு ஒருபொருள் நுதலிற்றாக உரையாக்கால், சூத்திரம் ஒன்று

மாறில்லை யென்க.' எ-து. 'எனவே பல தொடர்ப்பட சூத்திரிப்பினும் அமையும், ஒருபொருள் நுதலிவரின், என்பதே சேனாவரையர்க்குக் கருத்தாதல் உணர்க.

மேலும் அவர், 'அவற்றுள், நான்கே இயற்பெயர், நான்கே சினைப்பெயர், நான்கென மொழிமனார் சினைமுதற் பெயரே, முறைப் பெயர்க் கிளவி இரண்டாகும்மே, ஏனைப்பெயரே தத்தம் மரபின' என்னும் சூத்திரத்துரையிலே,

'கூறப்பட்ட பெயரது பாகுபாடாகிய ஒரு பொருள் நுதலுதல் பற்றி ஒரு சூத்திரம் ஆயிற்று. நான்காய் விரிதலும் இரண்டாய் விரிதலும் தாமேயாதலும் ஆகிய பொருள் வேற்றுமையால் மூன்று சூத்திரம் எனினும் அமையும்' என்று கூறினர். அதனாலும் ஒருபொருள் நுதலிவரும் ஒருசூத்திரம் பலதொடர்ப்பட வரலாமென்பதே முடிந்தது.

ஆசிரியர் தொல்காப்பியனார், கிளவி யாக்கத்திலே திணைவழு பால்வழு முதலிய வழுக்காத்தலை ஓதுவான் எடுத்துக்கொண்டார், முன்னர்த் திணையும் பாலும் உணரப்பட்டாலன்றித் திணைவழுவும் பால் வழுவும் உணரலாகாதென்னும் கருத்தால், 'உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே' என்னும் சூத்திரத்தால் திணைவரையறையும், 'னஃகானொற்றே ஆடூஉ வறிசொல்' முதலிய சூத்திரங்களால் பால்வரையறையும் ஓதி, அப்பால் வழுவமைத்தார். இவ்வுண்மையை உணராது குறிப்புரையாளர் வடநூற் குப்பையைச் சீத்துக் கோட்டித் தமிழிலக்கண வகழியைத் தூர்க்க முயன்றார்.

இத்துணையும் கூறியவாற்றால், உயர்திணை என்மனார் மக்கட்சுட்டே..............சொல்லே.' என்னும் சூத்திரத்துக்குப் பண்டை உரையாசிரியர்கள் பல தொடர்ப்படப் பொருள் உரைத்து, அச்சூத்திரம் நுதலியபொருள், உயர்திணை அஃறிணைப்பொருட் பாகு பாட்டோடு சொற் பாகுபாடும் கூறுதலே என்றுரைத்ததே பொருளென்பதும், குறிப்புரையாளர் சூத்திரவிலக்கணம் உணராமையால், பண்டை உரையாசிரியர் கொள்

கைகளைப் பிறழவுணர்ந்து மறுத்தது தவறென்பதும், அச் சூத்திரத்தில் உத்தேசியம் இது விதேயம் இதுவென்று அவர் எடுத்துக்காட்டி உரைத்தவெல்லாம் தவறென்பதும், இச்சூத் திரக் கருத்துப் பற்றிப் பேராசிரியர் பொருளதிகார வுரையினும் சிவஞானமுனிவர் சூத்திர விருத்தியினும் உரைத்தவாறெல் லாம் அவர் உணர்ந்திலர் என்பதும், பல தொடர்ப்பட்ட உரைக்கப்பட்ட பல சூத்திரங்கள் சொல்லதிகாரத்துள்ளே யன்றி எழுத்ததிகாரத்துள்ளும் பொருளதிகாரத்துள்ளும் ஓதப்பட்டுள்ளனவென்பதை அவர் அறியார் என்பதும், இரு திணைப் பாகுபாடு கூறுதலே ஆசிரியர் தோல்காப்பியனுர் கருத் தென்பதும் பிறவும் உணர்த்தப்பட்டவாறு அறிக.

குறிப்புரையாளர் மிக அரிதின் முயன்று கண்டெடுத்த வாக்கியபேதம் என்னும் வடநூற்குற்ற வுணர்ச்சிக்குப் பற்றுக் கோடாகக் கொண்ட ஆனுவுரைச் சிறப்பிற் சேனுவரையர் உரை யினும், அவ்வாக்கியபேதம் என்னும் குற்றம் வந்ததாகக் காட் டினர். இது வன்றோ,

'நீடுகேல் வெற்ப நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்' என்பது.

'அச்சேனுவரையர் நிலங்கடந்தான் என்பதைத் தொகையாகக் கொண்டு, அதற்காகப் 'பெயரினுகிய தொகையுமாருளவே, அவ்வுமுரிய அப்பாலான' என்னும் சூத்திரத்துக்கு வாக்கிய பேதம் வருமாறு பொருள் கொண்டார்' என்று குறிப்புரை யாளர் தம்முகவுரையுட் கூறினர். அதுவும் மேற்கூறிய வாற் ருன் மறுக்கப்பட்டவாறு அறிக. அச்சேனுவரையர் 'வினை யிற்ருேன்றும் பாலறி கிளவியும்' என்னும் சூத்திரத்துரையுள், இருதொடர்பட்ப் பொருளுரைத்து, அதன்மேலும் 'தம்மர பினவே' என்பதனைப் பிரித்து வேருேர் தொடராக்கிச், 'சொற்கண் மரபு பிறழா தம்மரபினவேயென மரபு வழுக் காத்ததாக உரைக்க; இது யோகவிபாகம் என்னும் நூற் புணர்ப்பு; முன் இருபொருள் படவுரைப்பனவெல்லாம் இந்நூற் புணர்ப்பாகக் கொள்க' என்றும் கூறினர். அவ்வுரை தமக்கு

உடம்பாடேயென. ஆண்டுக் குறித்த குறிப்புரையாளர் 'பெயரி னுகிய தொகையு மாருளவே' என்னும் சூத்திரத்துக்குச் சேனாவரையர் வாக்கியபேதம் வருமாறு கூறினர் என்றல் தவறுதல் காண்க. இதன் தொடர்ச்சி, இவ்விதழிலேயே, பின்னர் உள்ளது.

ஒளியென்பது யாது?

திரு. A. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர்.

புறவுலகத்தையும் அதன் கண்ணுள்ள பொருள்களையும் நமது அறிவிற்குப் புலப்படுத்துதற்குக் கருவிகளாக அமைந் துள்ள பொறிகள் ஐந்தினிற் கண்ணேனும் பொறியே சாலச் சிறப்புடையதாகும். என்னையோவெனின், கட்புலனுல் எழும் அறிவே ஏனைய புலன்களான் வரும் அறிவினும் அளவு விஞ்சி யிருக்குமாதலான், கட்புலனை ஒருவன் இழக்குங்கால், அவன் எய்தும் அறிவு ஐந்திலொரு கூறுக்குமேலே குறைவுபடுதல் வேண்டும்; அங்ஙனமே அப்பொறிவாயிலாக அவன் எய்தும் இன்பமும். இதனுனன்றே வேறு புலன்களைச் சுட்டாது "கண்ணிலான் பெற்றிழந்தா னென்வுழந்தான்" எனக் கவி யரசப் பெருமானும் கட்புலன் சார்பாகத் தமதுள்ளக் கருத் தைக் கவினுற விளக்கினர். இத்துணை விழுப்பம் வாய்ந்த கட்பொறி தொலையிலுள்ளதொரு நீலமால்வரையின் உண்மை யை நமக்குப் புலப்படுத்துங்கால் நாம் அதன்கட் செல்வது மில்லை, அது நம்மை அணுகுவதுமில்லை; எனினும், அப் பொருளின் நிறம் வடிவம் உயரம் சேய்மை முதலியவற்றைப் பற்றிய அறிவு நம்பாட்டெழுதல், ஊன்றி நோக்குவார்க்கு ஓர் இறும்பூதன்றே? தொலை நின்ற பொருட்கும் நமக்கும் இடைநின்று, அப்பொருளின் விடுதூதாய் அமைந்து நம்பாற்

சார்ந்து, ஓர் அரிய உணர்ச்சியை எழுப்பும் பணியாளன் ஒருவன் வேண்டப்படுவ னன்றோ? அவனே ஒளியெனும் பெயரினன்; அவனே எங்கணும் பரந்த தனது நீண்ட கரங்களால் அனைத்துப் பொருள்களையும் ஆர்வத்தோடு தழுவுபவனாகி, வேண்டுங்கால் நமக்கு வேண்டியவற்றைப் புலப்படுத்தி யுதவுகின்றான். அவன் நமக்குப் பணி செய்யாதவழி பொருள்கள் விளங்கா. நமது கண்கள் இருந்தும் பயனிலவாம். வெளியுலகிற் கூரும் இருளை விழுங்கி அறிவையூட்டும் இவ்வொளியின் பெருமையை உணர்ந்தன்றோ, அகவிருணீக்கி வாலறிவுச் சுடர் கொளுத்தும் உன்னற்கரிய பரம்பொருளை ஒளி வடிவினதாக உரைத்தார் உரவோர். இவ்வொளிதான் பொருளோ பண்போ அன்றிப் பிறிதெதுவோ என்பதை, மேற்றிசைத் தோன்றிய இயற்கைப் பொருணூல் ஆராய்ச்சியாளர் தேர்ந்து கண்டவாறே எழுதுவாம்.

உலகிலுள்ள பொருள்கள் யாவும் ஒளிவிடுவன ஒளியற்றன என இருவகையாகப் பிரிவுபடும். அவற்றில் ஒளிவிடும் பொருள்கள், ஞாயிறு மின்மினி மின்சாரவிளக்கு விண்மீன் போலத் தாமாகத் தோன்றுந் தன்மையும் ஒளியுமிழும் இயல்பும் உடையனவாகி; அவ்வொளியால் ஒளியற்ற பொருள்களின் இருப்பை அறிவிக்கும் ஏதுக்களாம். ஒளியற்ற பொருள்களோ தாமாகத் தோன்றும் திறனிலவாய், ஒளிவிடும் பொருள்களின் உதவியானே தோற்றுவிக்கப்படும் தன்மையனவாம். இவ்விரு வகைகளில் எவ்வகைத்தாயினும் பொருள் கண்ணிற்குப் புலனாதல் ஒளியின் உதவிபற்றியே என்பது துணிபு.

ஒளியென்பது யாது என்னும் வினவிற்குத் தக்க விடையளிக்கும் கருத்தோடு முதன் முதலாக அதனை ஆராயப் புகுந்த அறிஞர் கி. பி. அறுநூறு ஆண்டுகட்குமுன் வாழ்ந்த பைதாகோராஸ் என்னும் கிரேக்கர். பொருள்களின் மேற்புறத்தினின்று கண்களை நோக்கி யெறியப்படும் அணுத்திரளே ஒளியெனப்படுவது என்றும், அந்நுண்ணிய பொருள்கள் நமது கண்ணிற்குட் புகுங்கால் அவற்றை வீசும் பொருளினைப்

பற்றிய உணர்ச்சியை நமக்கு அளிக்கின்றன என்றும் அவர் கருதினர். பின்னர் இருநூறாண்டுகட் கப்பால் ஆன்ற கலையறிவும் சான்ற நல்லிசையும் உடையராய் மிளிர்ந்த அரிஸ்தாத்தில் என்னும் பேராசிரியரும் ஒளியைப்பற்றித் தாம் கொண்ட கொள்கையை எழுதிப் போந்தனர். அக்காலத்திய உலகத்து அவரினும் அறிவின்மிக்கார் இலாமையின், அவரது முடிபுகள் யாவும் பொய் தீர்ந்த மெய்யுரைகளெனப் போற்றப் பட்டு வரலாயின. அரிய கற்றுத் தேர்ந்தவரும், அந்நாள், அரிஸ்தாத்திலரது கொள்கைகளை மறுத்துரைக்கத் துணியார். துணியினும், ஆய்ந்தாரது குழுவினில் அவ்வுரை மேற்கோளாகக் கொள்ளப்படா தொழியும். இத்துணைப் பெருமையாளர் ஒளியென்பது ஒரு பொருளன்றென்றும், கண்களைநோக்கி நுண்ணிய அணுக்களைப் பொருள்கள் வீசுதலே ஒளியென்பது தவறெனதென்றும்கூறி, பொறிகட்குப் புலனாகாது கரந்தெங்கும் பரந்த கடலொன்றில் எழும் அலைகளின் இயக்கமே ஒளியென்று முடிபு கட்டினர். இக்கொள்கையையும் பிற்காலத்தார் மெய்யெனக் கருதாது, பழைய கொள்கையையே உண்மையென நம்பிவந்தனர். கரப்பான் முதலிய பூச்சிகளின் முகத்திற் கிளரும் மயிர்க் கரங்களைப் போன்று நமது கண்களினின்றும் புறம்போந்து பொருள்களைச் சாரும் கதிரே ஒளியென்றும் உரைத்தனர் ஒரு சிலர். இற்றைக்கு இருநூறு ஆண்டுகட்கு முன், இயற்கைப் பொருணூலாராய்ச்சியைச் செவ்வனே ஒழுங்குற நிகழ்த்திப் பல அரிய பெரிய உண்மைகளையும் கொள்கைகளையும் நிலை நாட்டிய நியூட்டன் என்னும் ஆங்கிலேயர் ஒளியினை அணுத்திரளென்றே நம்பியிருந்தனர். இந் நம்பிக்கையே பின்னாளிற் பரவி அனைவராலும் உண்மையென ஒப்புக் கொள்ளப்பட்டு நிலைப்பதாயிற்று. ஆயினும், 1804-ம் ஆண்டில் யங் என்னும் இயற்கை நூற் புலவர் அதனை மறுத்துரைத்து, அரிஸ்தாத்திலர் கூறியாங்கே ஒளியென்பது ஓர் அலையியக்கமே என்று ஆராய்ச்சி முகத்தானே நிலை நாட்டத் தொடங்கினர். அலையியக்கக் கொள்கையையும் அணுத்திரட் கொள்கையையும் முறையே பின் பற்றியவர் ஒருவரோடொருவர்

மாறுபட்டு இடையிடையே சொற்போர் நிகழ்த்தி வந்தனரெனினும், யங் என்பவரது கொள்கையே செழுபன் முறையால் நிறுவப்படும் மாட்சியினால் உரம்பெற்று ஒளிர்வதாயிற்று. பொருளினின்று ஒளி கிளம்புவதாகக் கொள்ளினும் கண்ணொளியொன்றாலேயே பொருள் புலப்படுகின்றதெனக் கொள்ளினும் நள்ளிருளிலும் பொருள்கள் புலனாதல் இன்றியமையாததாகலானும், அது இயற்கை நிகழ்ச்சிக்கு மாறாதலானும், அவ்விரண்டு கொள்கைகளும் பொருந்தாவென்றும், கண்ணொளியும் கதிரவன்போன்ற ஒளியுடைப் பொருளினின்று வரும் ஒளியும் கலந்து ஒருபொருளைத் தெரிவிக்கின்றன என்றும் நமது நாட்டினில் ஒருசாரார் நவிலுவர்.

யங் என்பவர் செய்த தேர்தற் செயலாவது இது:— மிக வொடுங்கிய செங்கதிர்க்கற்றை யொன்று செல்லும் ஆற்றினில் காகிதத் தட்டியொன்றைச் செங்குத்தாக நிறுத்தினார். பின்னர் அதன்கண் இரு சிறு துளைகளை மிக்க அணிமையில் உண்டாக்கி, அவ்விரண்டின் வழியானும் அக்கதிர்க் கற்றையை மட்டமாக நேரே புகவிட்டு, அப்பால் ஒரு வெண்டிரையின்மீது அவ்வொளியை விழச்செய்தார். தட்டியினின்றும் வெளிப்போந்த இருகதிர்க் கற்றைகளும் மயிரிழையளவே ஒன்றை விட்டொன்று விலகி வருதலின், திரையின்மீது செவ்வொளி பரவிய ஓரிடமே காணப் படுதல்வேண்டும். ஆனால் யங் என்பவர் அவ்விடத்தை யாராய்ந்தபோது, செந்நிறப் பட்டைகளும் இருட் பட்டைகளும் மாறிமாறி அவ்விடத்தே தோன்றுவதைக் கண்டார். துளைகளில் யாதேனும் ஒன்றை மறைத்தவழி, செவ்வொளி பரந்த இடம் ஒன்றே தென்படுதலையும் நோக்கினார். பட்டை பட்டையாக நிழலிடம் காணப்பட்டது என்னையோ என்று தமக்குட் டாமே உசாவலாயினர். அணுத்திரளே ஒளியாமாயின், அணுத்திரள்களின் ஆறுகளிரண்டு திரைமீது விழுங்கால், இரண்டும் ஒன்றாயிணங்கி ஒளியை மிகுதியாக்குதல் வேண்டுமேயன்றி நிழலையுண்டாக்க வழியில்லையென்றும், இரண்டு கதிர்க் கற்றைகளும் ஒருங்கு கூடுமிடத்து இருளுண்டாதல் இயைபுடையதன்று என்றும் நினைந்தார்.

ஒளிக்கதிரென்பது ஓர் அலையாமாயின், பரந்து செல்லும் இரண்டலைகள் ஒன்றோடொன்று மோதிப் பொருங்கால் ஒன்றை யொன்று அழித்தல் இயலுமாதலின், அப்போர் நிகழுமிடத்தே ஒளியின்மைபற்றி இருள் தோன்றுதல் வியப்பன்று என்று துணிந்தார். உலகினைச் சூழ்ந்து நிற்கும் காற்றின்கண் எழும் ஒலியலைகள் ஒன்றோடொன்று இவ்வண்ணம் பொருதழிந்து ஒலியின்மையை விளைத்தல் செயல் முறையால் தெளியப் பட்டிருத்தலின், அது போன்று ஈண்டும் ஒளியலைகள் பொரு தழியும் இடங்களே நிழற் பட்டைகளாயின என்று முடிபு கட்டினர். இன்னும், அவ்வொளியலைகள் பரவுதற்குரிய பொரு ளொன்று புலன்கொள வாராது அண்ட முழுதும் எவ்விடத்தும் பரவியிருத்தல்வேண்டும் என்றும், இன்றேல் வெகு தொலை நின்ற விண்மீன்களின் ஒளி நம்மைச் சார்தல் ஒண்ணது என்றும், இந்நானிலம் முழுதும் அத்தகைய அண்ட முழுதும் பரந்த வான் (ஆகாயம்) எனும் கடலிடை யமிழ்ந்து கிடக்கும் ஓர் உருண்டைப் பொருளாதல்வேண்டும் என்றும் நிறுவினர்.

'கடலாடை யுடுத்த நிலமங்கை' யென்றும், 'உவர்நீர் நன்னீர் பால் தயிர் நெய் கருப்பஞ்சாறு தேன் எனும் ஏழ்கடல் சூழும் இருநிலம்' என்றும் நமது நாட்டுக் கவிஞர் கூறுதல் மரபு; ஆனல் அக்கவிஞரது கற்பனைக் காட்சிக்குப் புலப்பட்ட கடல்களேழில் உவர்நீர்க்கட லொழிந்த ஏனையவை நம்மவர் கண்களுக்கு மறைபட்டொழிந்தன என்பது வெள்ளிடை விலங்கலே யாம். இவ்வுலகினைச் சூழும் உவரியையன்றி எம் மருங்கும் அதனைச் சுற்றி வளைந்து கொண்டிருக்கும் வாயுக் கடலொன்றும் உண்டு. இவ்வாயுக்கடல் ஏறக்குறைய இரு நூறுமைல்வரை வையத்தைச் சுற்றி வானத்திலுள்ள வெளி யிடத்தை நிரப்புகின்றது பற்றியே, வெண் முகில்களும் விண் ணூர்திகளும் அதனல் தாங்கப்பெற்று வானத்தே மகிழ்ந் துலவுகின்றன. விண்ணில் விரைந்தியங்கும் விமானத்தையும் இருப்புப்பாதைமீது விரைந்தோடும் நீராவி வண்டியையும் தாக்கி யெதிர்த்து அவைகளின் விசையினைத் தணிக்கும்

பொருளும் அதுவே. மெய்வாயிலாகவோ பார்வை வாயி லாகவோ புலனாகும் வாயுக்கடல் நீர்க்கடல் எனும் இரண்டினை யும் போலாகாது, ஒரு புலனானும் நுணுகியும் அறியவொண் ணாததன்மையதாய், அகலிட முழுதும் பல்கோடி மைலுக் கப்பாலான் வெகு தொலைவரையும் எப்பொருளினுள்ளும் பொருளற்றவிடத்தும் பரந்துள்ள பிறிதொரு கடலும் உண் டெனக் கருதுவர் இயற்கை நூல் வல்லார். இஃது இன்ன தன்மையதென அறியற் பாற்றன்று எனினும், அதன் உண்மை கருதலளவையால் இன்றியமையாதவாறு நிறுவப்படலாயிற்று. அக்கடலே வான்கடல் என்ற பெயராற் குறிக்கப்பட்டது. ஆக முக்கடல் சூழ்ந்தது இவ்வுலகு என்பதாயிற்று.

இவ்வானெனும் பொருளை உலக வழககிற்போல் ஒரு பொருளெனப் புகலலும் பொருந்தாக் கூற்றும். அதனைக் கடலெனக் கழறலும் உவமை பற்றியே. அதன்கண் அலை யெழுந்து பரவுதல் ஒன்றும், அவ்வலைகள் உலகப்பொருளைத் தாங்குங்கால் அவைகளிற் காணும் மாறுபாடுகள் நமது புல னறிவிற்கு இலக்காதலொன்றும் செயல் முறையால் நிலைநாட் டப்படும் தகைமையவாம். இம்மண்ணுலகம் ஞாயிற்றினைச் சுற்றிவரும் வீதியில் நிமிடத்திற்கு ஓராயிரமைல் வீதம் வான் கடலினூடே செல்லுங்கால், அவ்வானெனும் பொருளால் அது இறையேனும் எதிர்ப்புண்டு விசை குன்றுதல் இல்லையெனின், அதனை யாம் பொருளெனல் எவ்வாறு பொருந்தும்? ஆயினும், இடியேறன்ன பேரொலியும் சென்று சேர்தற்கரிய சேய்மையி லுள்ள பரிதியின் ஒளியும் அதற்கும் பெருந்தொலைக்கப்பால் மிளிரும் உடுக்கணங்களின் ஒளியும் நமது கண்களைச் சார்தல் உண்மையாதலின், அப்பொருள்கட்கும் நமக்கும் நடுவே இடையீ டின்றித் தொடர்புபட்டு நிற்கும் பொருளொன்று இருத்தல் தானே போதருமன்றோ? மண்ணுலகம் ஞாயிற்றினைச் சுற்றி வரும்போதே அம்மண்ணுலகை விட்டு விலகாதும் அதனோடு மோதி யொன்றாகாதும் விதிமுறைக் கடங்கி மதிசெல்லும் வகையை ஊன்றி நோக்குவோமாயின், மதியினைப் பாரினோடு பிணைக்கும் கயிறுபோன்ற பொருளொன்று உளதாதல்வேண்டும்

என அறிவு வற்புறுத்துமன்றோ? அத்தகைய பொருளே வான் பொருள். அஃதில்லையெனில், காந்தம் அதன் அருகுள்ள இரும்பூசியைத் தான் செல்லும் வழியே வரச் செய்வதென்ன? காந்தச் சத்தி எதன் வழியாகப் பரந்து செல்கின்றது? உரசு மின்சார சத்தி யூட்டப்பெற்ற ஒரு கண்ணாடிக்கம்பைச் சிறு காகிதத் துணுக்குகட்கு மேற்பிடித்து உயர்த்துங்கால், அச்சிறு துண்டுகளும் உடன் உயர்வதேன்? வானினை நோக்கி ஓச்சிய கல் விசை குன்றிப் போய்ப் பின் தரையை நோக்கி விரைவது எதனால்? இவற்றையும் இவையனைய பிறவற்றையும் ஆராய்ந்தே முன்னோர் வான் பொருள் உண்டென வகுத்தனர். 'நுண்மாண் நுழைபுல' முடைய நியூட்டன் என்பாரும், "வான் பொருளின் உண்மையை அறிஞர் மறுப்பரோ? ஒன்றிற்கொன்று வெகு தொலையிலுள்ள இருபொருள்கள் ஒன்றுலொன்று கவரப்படுதல், நடுவே (அக்கவர்ச்சி செல்வதெற்கெனத்) தொடர்புபட அமைந்த பொருளொன்று இல்லாதவழி யாங்ஙனம் இயலும்? இதனையறியும் திறனிலார் அறிவிலாரே" என்று இயம்பினர். படைக்கப்பட்ட உலக முழுதும் மூழ்கிக் கிடப்பது அவ்வான் கடலினுள்ளே; இன்னும் உலகத்திலுள்ள திண்பொருள் முதலாக ஆவிப் பொருளீறுக அனைத்துப் பொருள்களும் துளையுடைப் பொருள்களாகவே கருதப்படுதலின், வான் பொருள் எப்பொருட்கும் உள்ளகத்தும் புறத்தும் பரவி நிற்பதாகக் கருதப்படுகின்றது.

நீரின்கண் அலைகள் எழுந்து பரவுதல்போல் வாயுவினும் அலைகள் எழுந்து பரவி ஒலிக்கு முதற் காரணமாவதைப் பலரும் அறிவர். நீரலைகள் கிளம்புங்கால், நீரின்கண் மேடுகளும் பள்ளங்களும் மாறி மாறிவர அலை ஒரு முகமாகச் செல்வதுபோல், ஒலியலைகள் காற்றின்கண் எழுங்கால், எம்மருங்கும் அலைகள் அங்ஙனமே கிளம்பும். ஒரு நீர்ப் பரப்பின்கண் எதிர் முகமாக ஒத்த வலியுள்ள இரண்டலைகள் ஒன்றையொன்று நோக்கி வருங்கால், சேருமிடத்து ஒன்றின் மேடும் மற்றொன்றின் மேடும் பொருந்துமாயின், அவ்விடத்தே நீரலையின் மேடு இருமடங்காகும்; ஆனால் ஒத்த வலியுள்ள இரண்டலைகள்

கூடுங்கால், ஒன்றின் மேடும் மற்றதின் பள்ளமும் பொருந்து மெனில் அவ்விடத்து வாய்க்கும் நீர் கீழோ மேலோ செல்ல இயலாது நிலையாக அமர்தல் வேண்டுமன்றே. இவ்வண்ணமே ஒத்த வலியுடைய ஒலியலைகள் இரண்டு முட்டுமிடத்து ஒன்றின் மேடும் மற்றதின் பள்ளமும் பொருந்துமேல், ஆண்டுள்ள வாயு அசைவின்றி நிற்குமாதலின், அவ்வமயம் ஒலியும் ஆங்கே இலதாகும். இதுபோன்றே ஒளியலைகள் வான் வழியாகப் பரவும்போதும், ஒத்த வலியுள்ள இரண்டலைகள் ஒன்றோ டொன்று மோதி யழிதல் இயலுமாதலின், அவ்வமயம் அவ் விடத்து இருளே தோன்றுதல் வேண்டும். இரண்டு ஒளி அலைகள் நாலா பக்கலினும் பரவி வரும்போது, ஒத்த வலி யோடு மோதியழியும் இடங்களிலெல்லாம் நிழற்கோடுகள் வரிசையாக ஒழுங்காக விட்டு விட்டு உண்டாதல் வேண்டு மாதலானும், ஒத்த வலியோடு இரண்டலைகள் எதிர்ந்து இணங்குமிடத்தெல்லாம் ஒளி இருமடங்காதல் வேண்டுமாத லானும், யங் என்பவர் செய்த ஆராய்ச்சியில் ஒளிப்பட்டை களும் இருட்பட்டைகளும் மாறிமாறி ஒழுங்காக அமைதல் இயல்பே. அலையியக்கக் கொள்கையொன்றே இங்ஙனம் கண்ட காட்சிகளைக் காரணங் கூறி விளக்கலின், அதனையே உண்மை யென்று நிறுவினர் யங் என்பார்.

ஒளிவிடும் பொருள்களினின்றும் ஒளி எண்ணிறந்த கதிர் கள் வடிவாகப் புறப்பட்டு வான் வழியாக அலையலையாக நாலா பக்கங்களினும் பரவுகின்றது. அங்ஙனம் பரவும் அலை களாகிய கதிர்கள் ஒரு பொருளின்மீது பட்டு மீண்டு நம் கண்ணிற் புகுங்கால், அப்பொருளைப் பற்றிய உணர்வு நம் முள் எழுகின்றது. இதுவே யாம் பொருளைக் காணும் வகை யாதலின், ஒளியென்பது அலையியக்கமே என்பதாயிற்று.

குறிப்புரையும் மறுப்பும்

(முற்றொடர்ச்சி பக்கம் 213.)

மறுப்பு 23.

(சூ. 1-குறிப்புரை)

சொல்லிலக்கணம்:—இவ்வதிகாரத்தில் சொல்லைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார் உணர்த்துதலான் இது சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து' என்றார்.

இதனால், சொல்லைப்பற்றி உணர்த்தினது யாதோ அது சொல்லதிகாரம் என்னும் பெயர் பெறுதற்கு உரியதென்பது முடியும். முடியவே,

'உயர்திணை யென்மனார்.......சொல்லே.'

'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே.'

'பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா.'

'வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது' என்றாற் போலும் சூத்திரங்களும் அதிகாரம் என்னும்பெயர் பெறுதற்கு ஏற்பனவாம். ஆகவே சொல்லதிகாரம் என்பதற்கு அவர் கூறிய விலக்கணம் பிழையாதல் அறிக.

'இவ்வதிகாரத்தில்,' 'இது' என்று வந்த இரண்டு சுட்டுக்களுள் ஒன்று மிகை. இவை நிற்க. 'சொல்லைப்பற்றி உணர்த்துதலான், இது சொல்லதிகாரம் என்னும் பெயர்த்தாயிற்று' எனக் காரணம் அடுத்து வந்த செயற்கைப்பொருளை ஆக்கம் கொடுத்துச் சொல்லவேண்டும். ஆக்கம் கொடாமல் 'பெயர்த்து' என்று கூறியது மரபு வழுவாம். இதற்கு விதி,

'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.'

'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.'

'ஆக்கக் கிளவி காரண முதற்றே.'

'ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.' என்னும்

கிளவியாக்கத்து சூத்திரங்களே. நீருக்குத் தண்மை இயற்கை தீயிற்கு வெம்மை இயற்கை. 'நீர் தண்ணிது,' 'தீவெய்யது.' என்பது இயற்கைப்பொருளை இற்றெனக் கிளத்தல்.

'நீர் வெய்யது எனின் அது செயற்கை. இயற்கையின் வேறுபட்டது செயற்கை. வேறுபாட்டுக்கு ஓர் காரணம் வேண்டும். நீர் வெய்தாதற்குத் தீயின் தொடர்பு காரணமாகும். ஆகவே தீயின் தொடர்பால் நீர் வெய்தாயிற்று என ஆக்கச் சொல் விரித்துக் கூறல் வேண்டும். நீர் வெய்து எனின் வழுவாமென அறிக. அவ்வாறே நிலத்துக்கு வன்மை இயற்கையே. 'நிலம் வலிது' என்னின், அது இயற்கைப்பொருளை இற்றெனக் கிளத்தல்' என்னும் இலக்கண விதியே. நிலம் வலிதாயிற்று என்னின் மரபு வழுவாம். ஆயினும், 'கல்லும் இட்டிகையும் (செங்கல்) பெய்து குற்றுச்செய்யப்பட்ட நிலத்தை 'வலிதாயிற்று' என்று சொல்லலாம். நிலம் இயற்கையில் வலிதாயினும், கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச் செய்யப்பட்டக்கால், தன்னியற்கையில் வேறுபட்டு வன்மை மிகுதி உற்றமையால் அது செயற்கைப் பொருளேயாம். ஆதலின் ஆண்டு 'நிலம் வலிதாயிற்று' என்பது 'செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறல்' என்னும் விதிபற்றிவந்த வழாநிலையேயாம்.

அவ்வாறே, 'நீர் நிலமும் சேற்று நிலமும் முன்மிதித்துச் சென்று வன்னிலம் மிதித்தான், நிலம் வலிதாயிற்று என்ற வழியும், முன்னர் மெலிதாயது பின்னர் வலிதாய் வேறுபட்டதென ஆக்கம் வேறுபாடு குறித்து நிற்றலின், இதுவும் 'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்' என்னும் விதிபற்றி வந்ததேயாம்.

'ஆக்கந்தானே காரணமுதற்றே' என்ற விதியால், முன்னர்க் கூறப்பட்ட 'நிலம் வலிதாயிற்று' என்பது 'கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச் செய்யப்பட்டமையால்' எனக் காரணம் அடுத்து வந்தது. பின்னர்க் கூறப்பட்ட 'நிலம் வலிதாயிற்று' என்பதற்கு நீர் நிலமும் சேற்று நிலமும் மெலிதாயிருந்தது காரணம் ஆதலால் அதுவும் காரணமடுத்து வந்ததேயாம்.

'ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினன்—ஏகமாய்
உள்ளத்தின் கண்ணுனன் உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தாற் காணுனே உற்று.' என்னும்

சிவஞானபோதத்துப் பதினோராஞ் சூத்திரச் செய்யுளுரையில், 'சேற்று நிலம் மிதித்துச் சென்றானுக்கு வன்னிலம்போலப் பரபோக விளைவு செயற்கைப் பொருளாய் நிற்றலின் (போகமாய் என) ஆக்கமும் (உணர ஏனக்) காரணமும் அடுத்து வந்தது' என்று சிவஞான முனிவர் கூறியவாற்றாலும் இரண்டாவதாக மேற்கூறிய 'நிலம் வலிதாயிற்று' என்பது செயற்கைப் பொருளாதலும் ஆக்கமும் காரணமும் அடுத்து வந்தவாறும் உய்த்துணர்ந்து கொள்க.

இனி, 'ஆக்கக் கிளவி காரண மின்றியும்
போக்கின் றென்ப வழக்கி னுள்ளே.' என்னும்

சூத்திர விதியால், வழக்கினுள் ஆக்கக் கிளவியினையுடையதாகிய செயற்கைப்பொருள், காரணக் கிளவி அடுத்துவாராமல் சொல்லப்படினும் குற்றமில்லையென்று மரபுவழு அமைக்கப்பட்டது. வழக்கினுள் குற்றப்படாது எனவே செய்யுளில் செயற்கைப் பொருட் கிளவி காரணச்சொல் அடுத்தே வருமென்பது பெறப்பட்டது. ஆகவே அது செய்யுட்கண் காரணக் கிளவியை அடுத்து வாராவிடின் மரபுவழுவாம் என்பதே முடிவு.

இதுவே சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறிய உரைக் கருத்து.

இளம்பூரணரோ, அச்சூத்திரத்திற்கு ஆசிரியர் கருத்தொடு முரணும்படி உரைவேறு கூறினர். அவர் உரை வருமாறு:— 'வாளாது ஓதும் சூத்திரமெல்லாம் வழக்கே நோக்கும்; செய்யுட்காயின் கிளந்தே ஓதும்; அதனால் 'வழக்கினுள்' எனவேண்டா; அம்மிகுதியான் ஆக்கமும் காரணமும் இன்றி வருதலும், காரணம் அடுத்து ஆக்கமின்றி வருதலும் என இரண்டும் கொள்ளப்படும்.' எ-து.

இவ்விளம்பூரணர் கருத்தைபற்றி, பவணந்தி முனிவரும் 'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்' என்ற முதனூற் சூத்திரத்தையே எடுத்தோதி இயற்கைப் பொருள் இலக்கணத்தைக் கூறிமுடித்துவிட்டுச் செயற்கைப் பொருள்பற்றி,

'காரண முதலா ஆக்கம் பெற்றும்
காரண மின்றி ஆக்கம் பெற்றும்
ஆக்க மின்றிக் காரணம் அடுத்தும்
இருமையு மின்றியும் 'இயலும் செயும்பொருள்' என்று

சூத்திரம் ஓதினர். இச்சூத்திரத்துள் 'காரணம் முதலா ஆக்கம் பெற்றும்' என்பது 'ஆக்கந் தானே காரண முதற்றே' என்னும் முதனூற் சூத்திரக் கருத்தைப் பற்றியது. 'காரண மின்றி ஆக்கம் பெற்றும்' என்றது 'ஆக்கக் கிளவி காரண மின்றியும் போக்கின்றென்ப' என்னும் சூத்திரக் கருத்தைப் பற்றியது. ஏனைய விரண்டும் (ஆக்கமின்றிக் காரணம் அடுத்தும் இருமையுமின்றியும் இயலும் செயும் பொருள்) இளம்பூரணர் உரையிற் கோடலைப் பற்றின.

இவற்றுள் 'ஆக்கமின்றிக் காரணம் அடுத்து வந்ததற்குச் சங்கர நமச்சிவாயர் காட்டிய உதாரணம்

"பல்லார்தோள் தோய்ந்து வருதலால் தீம்புனல்
நல்வய லூரநின் தார்புலால்' என்பது.

ஈண்டு, வருதலால் எனக்காரணம் அடுத்து வந்ததேனும் புலால் ஆயிற்று என ஆக்கம் கொடுத்துக் கூறப்படாமல் புலால் என்றே சொல்லிவிடப்பட்டது.

இதற்குத் தொல்காப்பியவுரையாசிரியர் இளம்பூரணர் காட்டிய உதாரணம் 'குருதி படிந்துண்ட காகம், உருவிழந்து, குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மால், தப்பியார் அட்ட களத்து' என்பது. இ-ள். சோழன் பகைவரை அட்டகளத்தில், காகம் குருதிபடிந்து உண்டமையால், குக்கிலின் புறம் போலும் புறத்தையுடைய வாயின, சிரலின் வாய்போலும் வாயையுடைய வாயின-எ-து. ஈண்டுக் குருதிபடிந்துண்டமை

யாகிய காரணம் வந்துள்ளது 'புறத்த வாயின' 'வாய வாயின' எனச் செயற்கைப்பொருளை ஆக்கச் சொற்கொடுத்துச் சொல்லல்வேண்டும். அவ்வாறன்றி 'குக்கிற்புறத்த' சிரல்வாய' என்றே வந்தமையால் 'ஆக்கமின்றிக் காரணம் அடுத்தும் வரலாமென்று இளம்பூரணர் கொண்டவாறே நன்னூலாரும் கொண்டார். இதனைச் சேனாவரையர் மறுத்து 'குக்கிற்புறத்த' சிரல்வாய' என்புழி ஆக்கச்சொல் செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றதென்றும், செயற்கைப் பொருள் யாண்டும் ஆக்கமின்றி வாராதென்றும் கூறினார்.

சேனாவரையர் கூறியவாறே நச்சினார்க்கினியரும் கூறினார்.

இருமையுமின்றி வந்ததற்கு உதாரணம் 'பயிர் நல்ல' என்பது காட்டினார் சங்கர நமச்சிவாயர். அதுவும் இளம் பூரணர் காட்டியபடியே. சேனாவரையரும் 'பயிர் நல்ல' என்பது 'இயற்கைப்பொருளை இற்றெனக் கிளத்தலே' யென்றும் செயற்கைப்பொருள் குறிப்பின், வழக்கினுள் காரணமடுத்து வாராவிடினும் அமையுமேனும், ஆக்கச் சொல்லடுத்து வாராவிடின் அமையாதென்றும் கூறி முன்னமே இளம்பூரணர் கொள்கையை மறுத்தனர். அவர் அது செயற்கைப் பொருளாயின் 'பயிர் நல்ல வாயின' என்றே சொல்லல்வேண்டும் எனவும் கூறினார். நச்சினார்க்கினியரும் சேனாவரையர் கூறியபடியே கூறி இளம்பூரணரை மறுத்தார்.

இனி அந்நன்னூற் சூத்திரத்து இரண்டாவது கூற்றாகிய 'காரணமின்றி ஆக்கம் பெற்றும்' என்பது பற்றியும் சிறிது தடையுளது. தொல்காப்பியனார் காரணமின்றி ஆக்கம்பெற்று வருதல் வழக்கினுள் மாத்திரம் அமையும் என்று ஓதினார். பவணந்தியாரோ வழக்கு செய்யுள் இரண்டினும் காரணமின்றி ஆக்கம்பெற்று வருமென்று குறித்தார். அதுபற்றி நன்னூல் உரைகாரர் அதற்குக் காட்டிய உதாரணம் 'பயிர் நல்ல வாயின' என்பது.

இது சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் வழக்கிற்குக் காட்டிய உதாரணமே. அவர் செய்யுள் வழக்கில் காரணம் பெற்றே வருமென உரைத்துப்,

'பரிசிலர்க் கருங்கலம் நல்கவும் குரிசில்
வலிய வாகுநின் தாள்தோய் தடக்கை' என்பதை

உதாரணம் காட்டினர். மேலும் அவர்,

'அரிய கானம் சென்றோர்க்கு
எளிய வாகிய தடமென் றோளே.'

'நல்லவை யெல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.' என்புழிக் காரணம்

முறையே காலம் என்பதும் ஊழ் என்பதும் வருவித் துரைக்கப்படும் ஆதலால் ஆண்டும் அவை காரணமின்றி வந்தனவெனப் படா என்றும் கூறினர். ஆகவே இதுபற்றி நன்னூலார் கூறியதும் முதனூலாசிரியர் கருத்துக்கு முரணுதல் அறிக.

இனி, எச்சவியலுள் ஆசிரியரால் ஓதப்பட்ட

'வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபா கும்மே
ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே' என்னும் சூத்

திரத்துள், 'ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே' என்பதும் செயற்கைப் பொருண்மை குறித்தலால் முற்கூறிய கிளவியாக்கத்துச் சூத்திரங்களோடு நோக்குடையதாயிற்று. இச்சூத்திரத்தின்படி காரணச்சொல், காரணப்பொருண்மையை உணர்த்தும் வினையெச்ச வாய்பாட்டால் வருவது. ஆண்டுக் காரணப் பொருண்மையைக் குறிக்கும் வேற்றுமை யுருபேற்ற பெயர் வாய் பாட்டான் வரும். இது தம்முள் வேற்றுமை யென்க.

'மருந்துண்டு நல்லனாயினன்' என்பது இச் சூத்திரத்தால் முடியும்.

'மருந்துண்டமையால் நல்லனாயினன்' என்பது 'ஆக்கக் கிளவிகாரணமுதற்றே' என்பதனால் முடியும்.

'வேங்கையும் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினும் தான் தண் ணியனே.'
'வில்லக விரலிற் பொருந்திய வாறு
நல்லகஞ் சேரின் ஒருமருங் கிலமே.' எனச் செய்யுளினும்

'கற்று வல்லன்' 'பெற்றுடையன்' எனவழக்கினும்

வினைக்குறிப்புச் சொற்கள் சிறுபான்மை ஆக்கமின்றியும் வருமென்று சேனாவரையர் கூறினர். அது முன்னர் அவர் 'ஆக்கக் கிளவிகாரணமுதற்றே' என்னும் சூத்திரவுரையுள், 'பயிர் நல்லவாயின' எனக் கூறுது பயிர்நல்ல' என்றே கூறின் மரபு வழுவாமென்று உரைத்ததனோடு மாறுகொள்ளுமென்பது. நச்சினார்க்கினியர் இதுபற்றிச் சேனாவரையரை மறுத்து, மேற்காட்டிய வினைக் குறிப்புச் சொற்கள் ஆக்கம் விரிந்தல்லது பொருளுணர்த்தா வெனக்கூறினர். ஆகவே ஈண்டு நச்சினார்க்கினியர் உரைக்கருத்தே கொள்ளப்படும்.

'ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே' என்னும் தொல்காப்பியத்துக்கு நேரான நன்னூற் சூத்திரம் 'ஆக்கவினைக் குறிப்பு ஆக்கமின் றியலா.' என்பது. அச்சூத்திரவுரையுள் சங்கரநமச்சிவாயரும் நச்சினார்கினியர் உரைத்தவாறே ஆண்டு ஆக்கம் தொக்கேனும் விரிந்தேனும் பொருளுணர்த்தும் என்றார்.

பரிமேலழகர் 'தமராகித் தற்றுறந்தார் சுற்றம்' என்னும் குறளுரையுள் ஆக்கச் சொல்விரித்துக் கூறியது காண்க. சேனாவரையரும், இவ்வோத்து இப்பெயர்த்தாயிற்று என யாண்டும் ஆக்கச் சொல்விரித்தே உரைத்தவாறு காண்க.

மேற்குறித்த பொருள்களைப்பற்றி, மேற்குறித்த சொல்லதிகாரத்துச் சூத்திரங்களின் உரையில், உரையாசிரியர் பலருடைய கருத்துக்களைப் பற்றியும் குறிப்புரையாளர் ஆராய்ச்சி செய்து தம் கருத்து இதுவென்று குறியாமையால், அவருடைய குறிப்புரை ஆராய்ச்சிக் குறைபாடு மிகவுடைத்தென்க.

மறுப்பு 24.

(சூ. 1-குறிப்புரை.)

'கிளவியாக்கம்' என்னும் ஒத்துக்கு அப்பெயர் வந்ததற்குக் காரணம் இன்னது என்பது பற்றி உரையாசிரியர் கூறியது ஒன்று. தெய்வச்சிலையார் கூறியது ஒன்று. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறியது ஒருவகை. கிளவியாக்கம் என்னும் ஒத்து நுதலியபொருள் இன்னது என்பது பற்றியும் அவ்வாறே. குறிப்புரையாளர், அவற்றுள் தெய்வச்சிலையார் கூறியதே பொருந்தும் என்றார்.

கிளவியாக்கம் என்பதுபற்றி இளம்பூரணர் உரை :—சொற்கள் பொருள்மேலாமாறு உணர்த்தினமையால் கிளவியாக்கம் ஆயிற்று-எ-து.

சேனாவரையர் உரை :—வழுஉக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் இவ்வோத்துக் கிளவியாக்கம் ஆயிற்று. ஆக்கம், அமைத்துக்கோடல். நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை அரிசி ஆக்கினார் என்ப ஆகலின்.

சொற்கள் பொருள்கண்மேலாமாறு உணர்த்தினமையால் கிளவியாக்கம் ஆயிற்று எனினும் அமையும். பொதுவகையால் கிளவி என்றமையால் தனிமொழியும் தொடர்மொழியும் கொள்ளப்படும். எ-து.

தெய்வச்சிலையார் உரை :—'கிளவியாக்கம். அது கிளவியது ஆக்கமென விரியும்; அதற்குப்பொருள் சொல்லினது தொடர்ச்சி எ-று. சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருண்மேல் ஆகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்றார்.'

'அல்வழித்தொடர் கிளவியாக்கத் துள்ளும், வேற்றுமைத் தொடர் வேற்றுமை யோத்துள்ளும், வேற்றுமை மயங்கியல் விளிமரபு என்பவற்றுள்ளும், தனிமொழிப் பகுதியாகிய பெயரிலக்கணம் பெயரியலுள்ளும், வினையிலக்கணம் வினையியலுள்ளும்,

இடைச்சொல் இலக்கணம் இடைச் சொல்லோத்துள்ளும், உரிச்சொல் இலக்கணம் உரிச்சொல்லோத்துள்ளும் உணர்த்தினர்.' எ-து.,'

நச்சினர்க்கினியர் உரை, சேனவரையர் உரைத்தபடியே.

கிளவியாக்கத்துள்! நான்கு சொற்கும் பொது விலக்கணம் கூறினர் என்று சேனவரையரும் நச்சினர்க்கினியரும் உரைத்தார்.

குறிப்புரையாளர், சேனவரையர் கூறியவற்றுள்ளே, சொற்கள் பொருண் மேலாகுமாறுணர்த்தினமையால் கிளவியாக்கமாயிற்றென்பது முதற் பன்னிரண்டு சூத்திரங்களுக்குப் பொருந்துமென்றும், வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் கிளவியாக்கம் ஆயிற்று என்பது 13-வது சூத்திர முதலாகவுள்ள சூத்திரங்களுக்குப் பொருந்துமென்றும் கூறினர். தெய்வச்சிலையார் கூற்றைப்பற்றி, ஒன்றும் சொல்லிற்றிலர். ஆகவே அவர் கூற்று இவர்க்கு உடம்பாடே போலும்.

சேனவரையர் கருத்தோ, கிளவியாக்கம் என்னும் ஓத்தில் தனிமொழியும் தொடர்மொழியும் பற்றிய வழுவமைதியும் வழாநிலையும் கூறப்படும் என்பது. தெய்வச்சிலையார் கருத்தோ, அதனுள் அல்வழித்தொடர்மொழி பொருண்மேலாகும் நிலைமை கூறப்பட்டதென்பது.

குறிப்புரையாளர், அவ்வுரையாசிரியர் கூற்றுள் 'தெய்வச்சிலையார் கூற்றே மிகப் பொருந்தும்' என்றார். இதனல் குறிப்புரையாளர் கிளவியாக்கம் என்னும் ஒத்து நுதலிய பொருள் இன்னதென்று உணர்ந்துகொள்ளும் ஆற்றல் தமக்கு இன்மையை விளக்கினர். ஈண்டுச் சேனவரையர் உரைத்த உரையே பொருத்தமானது. தெய்வச்சிலையாரது உரை பொருந்தாது. இளம்பூரணர் உரையும் பொருந்தாது. கிளவியாக்கம் என்னும் ஒத்து நுதலிய பொருள் நால்வகைச் சொற்களுக்கும் பொதுவாக வழுவமைத்தலே.

சொற்பற்றிய வழுக்கள் எழுவகைப்படும்; திணைவழுவும், பால்வழுவும், இடவழுவும், காலவழுவும், வினவழுவும், செப்பு வழுவும், மரபுவழுவும் என. வழுவற்க என்றலும் வழுவமைத்த லும் என வழுக்காத்தல் இருவகைப்படும். குறித்த பொருள் களை அதற்குரிய சொல்லாற் சொல்லுக என்றல் வழுவற்க வென்றலாம். குறித்த பொருட்குரிய சொல்லன்றாயினும் ஒரு வாற்றான் அப்பொருள் விளக்குதலின் அமைகவென்றல் வழு வமைத்தலாம். இதனை "இரு திணைமருங்கின் ஐம்பாலறிய' என்னும் சூத்திரத்துச் சேனாவரையர் கூறிய உரையால் உணர்க.

பொருள் வகையால் பெயர்ச்சொல் என்றும் வினைச்சொல் என்றும் பகுக்கப்பட்ட சொற்களை ஆசிரியர் அறிவுவகையால் உயர்திணைச் சொல் என்றும் அஃறிணைச் சொல் என்றும் தொகுத்தார். உயர்திணைச் சொல்லை ஆண்பாற் சொல்லும் பெண்பாற் சொல்லும், பலர்பாற் சொல்லுமென மூன்றாக வகுத்தார். அஃறிணைச் சொல்லை ஒன்றன்பாற் சொல்லும் பல வின்பாற் சொல்லுமென இரண்டாக வகுத்தார். இது 'அவற் றுள், 'நூலெனப்படுவது நுவலுங்காலை' என்னும் செய்யுளியற் சூத்திரத்துத் 'தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி' என்னும் சூத்திர விதியால் முடிந்தது.

திணை இன்னதென்று உணர்ந்தாலன்றி, அதன் உட்பகுதி யாகிய பால் உணர்தலாகாது. பாலுணர்ந்தாலன்றி இடமும் காலமும் உணர்தலாகாது. வினவும் செப்பும் மரபும் உணர்த லாகாது. (கிளவி. சூ-10. சேனா உரை பார்க்க.) எனவே திணையும் பாலுமே மற்றெல்லாவற்றிற்கும் முதல் என்பது உணரப் படும். மேலும் திணை பால் என்னும் இவற்றின் இலக்கணம் ஒரு வகையான் உணர்ந்தாலன்றி, அவற்றின் வழுவுணரலாகாது. ஆகவே திணை பால் இவற்றின் வழா நிலையும் வழுவமைதியும் உணர்த்துதற்கு முன்னர் ஆசிரியர் 'உயர்திணை யென்மனார் மக் கட்சுட்டே' என்னும் சூத்திர முதல் பத்துச் சூத்திரங்களால் திணை பால் இவற்றின் இயல்பும் வரையறையும் வினைச்சொல்லீறே பற்றி ஓதிக்கருவி செய்து கொண்டார். (மரபியல் சூ. 100. பேராசிரியர் உரை பார்க்க)

'பன்மையும் ஒருமையும் பாலறி வந்த........
முன்னுறங் கிளந்த உயர்திணை யவ்வே' என்னும்

சூத்திரத்துச் சேனாவரையர் உரையும் இதனை வலியுறுத்தும்.

'வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.' என்னும்

கிளவியாக்கத்துச் சூ. 11-முதற்கோண்டே அவ்வோத்து வழுக்காத் தற்குத் தோடங்கியது. இதனை அச்சூத்திரத்துச் சேனாவரையர் உரையானும் உணர்க. ஆகவே அச்சூத்திரத்திற்கு முன்னோ தப்பட்ட பத்துச் சூத்திரங்களும் கருவிச் சூத்திரங்களெனத் * தெரிந்து கொள்க.

'யாதெவ னென்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயிற் செறியத் தோன்றும்.'
(கிளவி-சூ-31).

இச்சூத்திரமும் கருவிச் சூத்திரமே. இது வினாவழுவமைத் தலுக்கு முன் ஓதப்பட்டது.

'வினைவேறு படூஉம் பலபொருள் ஒருசொல்
வினைவேறு படாஅப் பலபொருளொருசொலென்று
ஆயிரு வகைய பலபொருள் ஒருசொல்' என்பதும் அது
ஒருவனை ஒருவர் என்று கூறுதல் பெயர்ச்சொற்பற்றி வழுவமைத்தவாறு. செத்தாரைத் துஞ்சினார் என்றல் வினைச் சொற்பற்றி வழுவமைத்தவாறு. பன்னிருகையும் பாற்பட இயற்றி' என இனத்தெதன அறிந்த சினைக்கிளவிக்கு வினைப்படு தொகுதியின் உம்மை கொடுத்துச் சொல்லுக என்றது இடைச் சொற்பற்றி வழுக்காத்தவாறு. செஞ்ஞாயிறு செவிசெஞ் சேவல் உரிச்சொற்பற்றி வழுக்காத்தவாறு. ஆகவே கிளவி

---

* 'எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே' யாக, அவற்றைப் பெயர் வினையிடையுரியென்று பாகுபாடு செய்தது, உயர்திணை அஃறிணை யென்றற் றொடக்கத்தன போலப் பொருள் வேறுபாடு பற்றிக் கருவி செய்தற் பொருட் டன்றே. எ-து. முதற் சூத்திரவிருத்தியுட் சிவஞான முனிவர் உரை.

யாக்கம் என்னும் ஒத்து முதலிய பொருள் நால்வகைச் சொற்களுக்கும் பொதுவாக வழுக்காத்தல் என்று சேனாவரையர் கூறிய உரையே பொருத்தமானதென்று அறிந்து கொள்க. சொற்கள் பொருண்மேலாமாறுணர்த்தினமையால் இவ்வோத்து கிளவியாக்கம் என்னும் பெயர் பெற்றதெனின்,

'முழுதென் கிளவி யெஞ்சாப் பொருட்டே.'

'பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள.'

'மழவும் குழவும் இளமைப் பொருள' எனச்சொற்கள் பொருண்மேல் ஆமாறு உணர்த்தினமையால் அச்சூத்திரங்கள் ஓதப்பட்ட ஒத்தும் கிளவியாக்கம் என்னும் பெயர் பெறுவான் செல்லுமென மறுக்க.

இனி ஒருவன் மேலாமாறு இது, ஒருத்தி மேலாமாறு இது, பலர் மேலாமாறு இது, எனப் பொருண்மேலாமாறுணர்த்தினமையின் கிளவியாக்கம் ஆயிற்றெனின், அதுவும் முதற் பத்துச் சூத்திரங்களுக்கே செல்லும் ஆகலானும், அவனிவன் உவனென வரூஉம் பெயரும், 'அதுவிது உதுவென வரூஉம் பெயரும்' முதலிய (பெயரியற்) சூத்திரங்களும் அவ்வாறு பொருண்மேல் ஆமாறுணர்த்தினமையால் அச்சூத்திரங்கள் ஓதப்பட்ட ஒத்தும் கிளவியாக்கம் என்னும் பெயர்பெறுவதற்கு ஏற்கும் ஆதலானும் அதுவும் பொருந்தாது.

(தொடரும்.)

பிழை—திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
199	16	தொகையுமாறுளவே	தொகையுமாருளவே
200	24	உத்தேசித்தெனல்	உத்தேசித்ததெனல்
202	14	ஆசிரியர் தான்	ஆசிரியர் தாம்

ஏனைய அடுத்த இதழில் வரும்.